தினமலர்
சென்னை | வெள்ளி | 1.11.2019

# இன்ஜி., 'ரேங்க்' பட்டியல்

**சென்னை, நவ. 1–**

இன்ஜினியரிங் கல்லூரிகளின் தேர்வில், அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களின் தரவரிசை பட்டியலை, அண்ணா பல்கலை வெளியிட்டுள்ளது. இதில், செயின்ட் ஜோசப் கல்லூரி முன்னிலை பெற்றுள்ளது.

அண்ணா பல்கலையில், ஆண்டுக்கு இருமுறை தேர்வு நடத்தப்படுகிறது. இதில், ஏப்ரல், மே மாத தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் தரவரிசை பட்டியலை, அண்ணா பல்கலை, நேற்று வெளியிட்டது.

இந்த பட்டியலில், சென்னை, செம்மஞ்சேரியில் உள்ள செயின்ட் ஜோசப் இன்ஜினியரிங் கல்லூரி, 53 இடங்களை பெற்று, அனைத்து உறுப்பு கல்லூரிகளில், முதல் இடத்தை பிடித்துள்ளதாக, செயின்ட் ஜோசப் இன்ஜினியரிங் கல்லூரி தெரிவித்துள்ளது.

செயின்ட் ஜோசப் கல்லூரி, மூன்று தங்கம், ஆறு வெள்ளி பதக்கங்களும் பெற்றுள்ளது.

011119